சிட்டிசன்....
CITIZEN...
கைக்கடிகாரங்கள்...
ஆடவர், மகளிர் அனைவருக்கும் ஏற்ற டிசைன்கள்.
மேசை, சுவர் மணிக்கூடுகள்
நேரடி இறக்குமதியாளர்கள்
சி. சின்னத்துரை அன் பிரதர்,
யாழ்ப்பாணம் - போன் 284

பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

மலர்: 20 ஆடி: 9 ஷவ்பா: 18 இதழ்: 164
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25-7-78

சுப்பர் ஸ்ரார்...பாட்டா
தாரகைகளுள் ஒரு தாரகை
சுப்பர் ஸ்ரார்...
ஒவ்வொரு இளைஞனும் யுவதியும், அணியக்கூடியது. கனடாவில் உருவாக்கப்பட்டது.
நகரில் கிடைக்குமிடம்...
சி. சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

UNIVERSITY OF SRI LANKA ... PERIODICALS DIVISION ... LIBRARY 1978-7-25

# புதிய அரசியலமைப்புச் சட்டம் இன்று சமர்ப்பிக்கப்படுகிறது

## ஆகஸ்ட் 2-ல் விவாதம்

### கூட்டணி நிலை காலையில் தெரியும்; சுதந்திரக்கட்சி வெளிநடப்புச் செய்யுமா?

[கொழும்பு]

**சுதந்திரமும், இறைமையும், தன்னுதிக்கமுமுள்ள ஜனநாயக - சோஷலிஸ இலங்கைக் குடியரசுக்கான புதிய வரைவு அரசியலமைப்பு நகல் சட்ட மூலம் இன்று தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.**

**பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இதனைச் சமர்ப்பிப்பார்.**

இதற்காக இன்று பிற்பகல் 2 மணிக்கு தேசிய அரசுப் பேரவை விசேடமாகக் கூடுகிறது.

இன்று சமர்ப்பிக்கப்படும் ஜனநாயக, சோஷலிஸ குடியரசு அரசியலமைப்பு மீதான விவாதம் ஆகஸ்ட் 2ந் தேதி சபையில் ஆரம்பமாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விவாதத்தில் கலந்து கொள்வதா இல்லையா என்பது பற்றி முடிவாகத் தீர்மானிப்பதற்காக பிரதான எதிர்க்கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழு இன்று காலை கூடுகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி விவாதத்தில் கலந்துகொண்டு தமது கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத பட்சத்தில், வெளிநடப்புச் செய்யுமென்று அரசியல் வட்டாரங்களில் சொல்லப்படுகிறது.

வரைவு அரசிலமைப்பு 19 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது.

சிங்களமும், தமிழும் தேசிய மொழிகள்;

சிங்களம் அரசகருமமொழியான அதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாகமொழி;

அமைச்சரவை அமைச்சர்களல்லாத மாவட்ட அமைச்சர்கள் நியமனம்;

விகிதாசார பிரதிநிதித்துவம்;

வம்சாவழி, பதிவுவழி என்றில்லாது அனைவரும் இலங்கைப் பிரசை;

நீதிமன்ற அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட சர்வ வல்லமை படைத்த ஜனுதிபதி.

என்பன வரைவு அரசியலமைப்பில் இடம்பெறும் முக்கிய அம்சங்கள்.

அரசியலமைப்பைத் திருத்துவதற்கான தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டதும், அரசாங்கத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் அதில் பங்குபற்றியதும், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அதில் பங்குபற்ற மறுத்ததும் தெரிந்ததே.

இக்குழுவின் அறிக்கை, கடந்த மாதம் 22ந் தேதி பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஜனுதிபதியின் அதிகாரங்கள், விகிதாசாரத் தெரிவு முறை போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, அரசியலமைப்புத் திட்டத்திற்குத் திருத்தமாகவன்றி, புதிய அரசியலமைப்புத் திட்டம் கொண்டு வரப்படுவதையும் எதிர்க்கிறது.

''நாம் அரசியலமைப்புக்குத் திருத்தங்களைச் சிபார்சுசெய்யவா? அல்லது புதிய அரசியலமைப்புத் திட்டமொன்றுக்குச் சிபார்சுசெய்வதற்காகவா தெரிவு செய்யப்பட்டோம்?'' என்று சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா, ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனுவுக்கு கடிதமொன்றும் அனுப்பியிருந்தார்

அதற்குப் பதிலளித்த ஜனுதிபதி, அரசியலமைப்பைத் திருத்துவதற்கோ அல்லது தயாரித்து ஏற்று நடைமுறைப் படுத்துவதற்கோ தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க மக்களின் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறேமென்று பதிலளித்திருந்தார்.

'இலங்கைப் பிரசை' என்பது தெளிவாக்கப்படவில்லை என்று இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்திருந்தார். இதே வேளை, அரசியலமைப்பு

(5ம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதி குடிநீர்த் திட்டத்திற்கு 6 லட்சம் ரூபா

(கொழும்பு)

நெடுந்தீவு, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களுக்கு, குடிநீர் விநியோகத் திட்டத்திற்காக 6 லட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவிடப் படவுள்ளது. இத்தொகையில் 1 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவை 'யூனிசெப்' நிறுவனம் வழங்கும்.

தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், தேசிய அரசுப் பேரவையில் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இதனைத் தெரிவித்தார்,

நீர் விநியோக வடிகால் சபை, இத்திட்டம் பற்றித் தற்போது ஆராய்ந்துவருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்,

ஊர்சாவற்றுறைப் பகுதியில் வரட்சிக் காலங்களில், நீர் விநியோகத்திற்குப் பாவிக்கப்பட்ட 'பவுசர்' தற்போது பழுதடைந்திருப்பதாகவும், இது, திருத்தப்பட்டு, விரைவில் அனுப்பிவைக்சப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பகுதிகளின் குடிநீர் விநியோகத்துக்காக 1 லட்சத்து 10 ஆயிரம் ரூபா, ஏற்கனவே யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு ஏப்ரல், ஜூலை மாதங்களில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக, இக்கேள்வி தொடர்பாகப் பிரதிச் சமூக சேவைகள் அமைச்சர் திரு. ஜே. எல். சிறிசேன, பதிலளிக்கையில் தெரிவித்தார். (ம)

## 200 குடிசைகள் தீக்கிரை!

சென்னை, ஜூலை 24

சென்னையில், மீனவர் வாழும் பகுதியில் நேற்றிரவு ஏற்பட்ட பெரும் தீ விபத்தில், இருநூறு குடிசைகள் எரிந்து சாம்பலாகின.

தீயணைப்புப் படையினர் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்தபோதிலும், தீயை அணைக்க 3 மணி நேரம் பிடித்தது. உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

## "ஈழத்தில் 85 வீதமானவர்கள் கல்வி அறிவுள்ளவர்கள்"

### கல்வி மாநாட்டில் ஜனுதிபதி பெருமிதம்

(கொழும்பு)

கல்வித்துறையின் தேவைகள் அதிகரிப்பதால், அதற்கான மாற்றங்களும் அவசியமாகின்றன என்று ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்றுக்காலை ஆசியபிராந்திய கல்வியமைச்சர்களின் பொருளாதார திட்டமிடல் மகாநாட்டை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இம்மாநாடு, யுனெஸ்கோ ஸ்தாபனத்தின் ஆதரவில், பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகிறது.

ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தொடர்ந்து பேசுகையில், ''இலங்கையில் எண்பத்தைந்து சதவீதமானவர்கள் கல்வி அறிவுள்ளவர்களாகவிருந்தாலும் நாட்டில் 10 லட்சம் பேர் வேலையின்றி இருப்பது பெரும்பிரச்னையாக நீடிக்கிறது. நாட்டிலுள்ள 10,000 பாடசாலைகளில் கல்வி போதிக்கப்படுகிறது. 25 லட்சம் பிள்ளைகள்பாடசாலை செல்கிருர்கள். சகல சுதந்திரங்களையும் உரிமைகளையும் சட்டரீதியாகக் கொண்டுவருவதே அரசின் குறிக்கோளாகும்'' என்று கூறினர்.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பேசுகையில்,பயனுள்ள யுகம் ஒன்றை உருவாக்க இம்மாநாடு வழிகாணவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மாநாட்டின் தலைவராக கல்வியமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன தெரிவு செய்யப்பட்டார்.

## உள்நாட்டு அமைச்சர் 28-ல் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வடபகுதிக்கு 3 நாள் விஜயத்தை மேற்கொண்டு இம்மாதம் 28-ம் திகதி யாழ்ப்பாணம் வருகின்ருர்.

அன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் அரசாங்க செயலக மண்டபத்தில் நடக்கும் மாநாட்டில்அமைச்சர்மொண்டேகு ஜயவிக்கிரம கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார்.

இம்மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல கூட்டணி எம். பி.க்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. இம்மாநாட்டில் சகல

(5ம் பக்கம் பார்க்க)

## இளைஞர் வெட்டிக் கொலை!

(மட்டுவில்)

வரணி நாவற்காட்டைச் சேர்ந்த நீலப்பிள்ளை செல்வராஜா (22வயது) என்னும்இளைஞர், நேற்று முன்தினமிரவு பல வெட்டுக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இறந்தவரின் உடலில் பல வெட்டுக்காயங்கள் காணப்பட்டன. ஒரு கை துண்டிக்கப்பட்டிருந்தது.

இக்கொலை சம்பந்தமாக கே. சேனுதிராசா என்பவர் சாவகச்சேரி பொலிஸாரினல் கைதுசெய்யப்பட்டார். கே. முருகேசு, எஸ். கணபதிப்பிள்ளை, வி. சிதம்பரநாதன், வி. மகேந்திரன் ஆகியோரை பொலிஸார் தேடுகின்றனர்.

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்,நகரில் மரவியாபார நிலையத்திற்கு டிப்போ மனேஜர் ஒருவரும்-மற்றும் எமது கைத்தொழில் நிலையத்தில் வேலைசெய்ய ஐந்துபெண்களும் ஒரு பெண் மேற்பார்வையாளரும் தேவை. உயர்ந்த ஊதியமும், மற்றும் வசதிகளும் செய்துகொடுக்கப்படும். அப்பளம், ஊதுபத்தி தயாரிக்கக் கூடியவர்களும் தேவை. திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும்: விளம்பர இலக்கம்: 9881,C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 9881

### வகுப்புகள்

Spoken English Classes எதிர்வரும் வியாழக்கிழமை தொடக்கம் ஒவ்வொரு வியாழனும் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது. மாணவிகட்கு தனிவகுப்பு. மாணவர் போதனுநிலையம், 77, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 9882

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பழை வறுத்தலைவிளானைச்சேர்ந்த காலஞ்சென்ற அம்பலவாணர் சிற்றம்பலம் சிவலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தினதும் உடமைப் பொருள்களினதும் விடயத்தில்,

அம்பலவாணர் சிற்றம்பலம், சிவலிங்கம்
- மரணமெய்தியவர்.

அம்பலவாணர் சிற்றம்பலம் சிவலிங்கம் கைம்பெண் செந்தில்ஞானவதி வறுத்தலைவிளான், தெல்லிப்பழை.
- மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
இலக்கம்: T/4

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு ஆடி (ஜூலை) மாதம் 28ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1978ம் ஆண்டு மாசிமாதம் 27ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
றிச்சேட் ஜெயராஜசிங்கம்
பதிவாளர்.

செ. புண்ணியமூர்த்தி
விண்ணப்பதாரியின்
சட்டத்தரணி. 9885

## நிர்வாகிகள்

(உருத்திரபுரம்)

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் இலங்கை அரசாங்கக் கூட்டுத்தாபனத் தொழிலாளர் சங்கம் இவ்வருடத்துககான புதிய நடப்பு வருட உத்தியோகத் தெரிவு நடைபெற்றது.

மேற்படி கூட்டத்திற்கு லங்காதொழிற்சங்க சம்மேளனத்தின் கூட்டுத்தொழிலாளர் தலைவர் திரு. அ. வைத்திலிங்கம் தலைமை வகித்தார்.

தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் பின்வருமாறு: தலைவர்: எஸ். டி. அந்தோனிப்பிள்ளை, உப-தலைவர்: என். இந்திரநாயகம். செயலாளர்: அ. தாமோதரம்பிள்ளை, உப-செயலாளர்: தா. மாணிக்கம், பொருளாளர்: எஸ். விக்கினேஸ்வரராஜா, மற்றும் 6 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [உ]



யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் ஆரம்பிக்கப்பட்ட 'நொதேர்ண் ஸ்போர்ட்ஸ்'காரியாலயத்தை திறந்து வைப்பதற்காக வருகை தந்த யாழ். கூட்டுறவு ஐக்கிய வியாபாரச் சங்க நிர்வாக முகாமையாளர் திரு. சி. க. கந்தசாமியை 'நோதேர்ண் ஸ்போட்ஸ்' ஆசிரியரும் உரிமையாளருமான திரு. இராஜேந்திரராஜா மாலை சூட்டி வரவேற்கிறார்.

## "வாழ்வில் சாரணியத்தின் பங்கு"

(யாழ்ப்பாணம்)

"சமயத்தின் நோக்கம் மனிதனைப்பண்பாக-சீராக வழி நடத்துவதேயாகும், இந்த நெறியில் சாரணியம் சமயங்களுடன் ஒன்றிணைந்து வாழ்க்கைக்குப்பயன் தருகிறது" என்று சாரணர்களுக்கு காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியில்அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் சாரணிய உதவிமாவட்ட ஆணையாளர் திரு. சி. எஸ். சுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவம் பரந்தன் இந்துக்கல்லூரி சாரணியர்கள் குழுவின் இயக்குநர் திரு. சி. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்றது.

நடேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. பி. சோமசுந்தரம் பேசுகையில் கூறியதாவது" பாடசாலைப்படிப்பிலும் பார்க்க முழுமையான சாரணப் பயிற்சிகள் மாணவர்களை நல்வழிப் படுத்துகின்றன என்பதற்கு அனேக சான்றுகள் உள்ளன" என்றார். (கெ-உ)

## ஓடுபிரித்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

வீட்டுக்காரர் உறங்கும் வேளையில் திருடர்கள் ஓட்டைப்பிரித்து சுமார் 9000 ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்,

இச்சம்பவம் யாழ்ப்பாணம் பழைய பூங்காவிற்குஅருகிளலுள் வீடொன்றில் நிகழ்ந்துள்ளது.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு பொலிஸ்நாய் கொண்டுவரப்பட்டு கள்வர்கள் விட்டுச்சென்ற துணி ஒன்று மோப்பம் பிடிக்கப்பட்டது. நாய், ஒருபாழடைந்த வீட்டிற்குச் சென்றுவிட்டு திரும்பிவிட்டதாம். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. இத்திருட்டில் ரேப் றெக்கோடர், சாறிகள் மற்றும் அலங்காரப் பொருட்கள் திருடப்பட்டுள்ளன. [கெ-உ]

## கைதி ஓட்டம்

(பதுளை)

மொனறாகல சிறை முகாமில் இருந்து ராஜ்குமார் என்ற வாலிபக் கைதி தப்பி ஓடிவிட்டார். (உ)

## "இல்லை என்ற குறைபோக்கிய சஞ்சிகை"

(யாழ்ப்பாணம்)

"சஞ்சிகைஒன்றைநடத்துவதென்பது மிகவும் கஷ்டமான காரியம். இன்றைய சூழ்நிலையில் விளையாட்டுத்துறைக்கென ஒருசஞ்சிகையை கடந்த ஒரு வருடகாலமாக நடத்தி வருவது பாராட்டுக்குரியதொன்றாகும்" என்று 'நொதேர்ண்ஸ் போட்ஸ்' சஞ்சிகையின் காரியாலயத்தை திறந்துவைத்துப் பேசிய யாழ். ஐக்கியவியாபாரச்சங்க நிர்வாக முகாமையாளர் திரு. கே. கந்தசுவாமி குறிப்பிட்டார்.

மேற்படி காரியாலயம் யாழ். இந்துக்கல்லூரிக்கு அண்மையில் காங்கேசன்துறை வீதியில் திறந்துவைக்கப்பட்டது.

திரு.கந்தசுவாமிதொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

விளையாட்டுத் துறைக்கென ஈழத்தில் சஞ்சிகை எதுவும் இல்லை என்ற குறையைப் போக்கும் முகமாக இச்சஞ்சிகை வெளிவருகிறது. இத்தகைய முயற்சியில் ஒருவர் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவது போற்றற்குரியது. இச்சஞ்சிகையினல் ஆசிரியர்கள், மாணவர்கள், விளையாட்டு ரசிகர்கள் அனைவருக்கும்" பயன் உண்டு.

சஞ்சிகையின் உரிமையாளரும், ஆசிரியருமான திரு இரஜேந்திரராஜா பேசுகையில் "நொதேண் ஸ்போட்ஸ்" இலங்கையிலே விளையாட்டுத் துறைக்கென வெளியாகும் ஒரே ஒரு சஞ்சிகை அதுவும் குறிப்பாக வடமாகாணரீதியில் இயங்கும் ஒரு சஞ்சிகை. எமது சஞ்சிகையின் வளர்ச்சியில் இன்றையதினம் ஒரு முக்கிய தினமாகும். விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதே எமது நோக்கமாகும். எமது சஞ்சிகையின் வளர்ச்சிக்கு ஆற்றல் மிக்க பெரியோர்களின் ஒத்துழைப்புத் தேவை. கல்விச் சேவையிலும், வணிகத்துறை முகாமையிலும் திரு. சி. கே. கந்தசாமிபெற்ற அனுபவம் எமக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும் என்ற அவாவின் பொருட்டேஅவரை இக்காரியாலயத்தை திறந்து வைக்க அழைத்தோம்என்றார்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் உப அதிபர் திரு. இ. கனகலிங்கம் உரை நிகழ்த்துகையில் இன்று தினசரி வெளிவரும் நாளேடுகளில் விளையாட்டுத்துறை பற்றிய செய்திகள் பெரிதும் குறைந்து வருகின்றன. ஒரு சில விளையாட்டுகளுக்கு மட்டும் மதிப்பும் தனிஇடமும் அளிக்கப்படுகின்றது. இப்படியான குறைகளை நீக்குமுகமாகவும் வடமாகாண ரீதியில் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்குமுகமாகவும் எமது சஞ்சிகை வெளிவருகின்றது என்றார். (இ)

# மல்லாகம் கொலைவழக்கு: விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கொலை வழக்கு விசாரணை அடுத்த மாதம் 11 ம் தேதிக்குப் பின்போடப்பட்டது.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 76 ம் ஆண்டு ஜூன் மாதம் 7 ம் தேதி மல்லாகத்தில் அழகன் நாகன் என்பவரைக் கொலை செய்ததாக விநாயகர் செல்வராசா, சின்னத்துரை சுந்தசாமி ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஏ. வி. டி. சொய்சா நேற்று வரவில்லை. 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம் ஆஜரானுர். அரசதரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் ஆஜரானுர்.

# 'அரசஊழியர்கள் மக்கள்சேவகரே'

(யாழ்ப்பாணம்)

"அரசாங்க ஊழியர்கள் மக்கள் சேவகரே. அவர்கள் இலங்கை மக்கள் எல்லோருக்கும் சேவைசெய்யக் கடமைப்பட்டவர்களாதலால், இவ்வூர் மக்கள் மட்டும் அவரது சேவையைப் பெறநினைப்பது தவறு. அவரின் தன்னலமற்ற சேவை மேலும் சிறக்க அவரது திறமை என்றும் உறுதுணையாகஇருக்கும்"

மயிலிட்டி அரசபொறியியல் கூட்டுத்தாபன ஸ்தலஅதிபர் திரு. எஸ். சபாரத்தினத்திற்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரவிழாவில் புதிய பொறுப்பதிகாரி திரு. ஆர். ஜெயரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. பொ. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஸ்தல உதவி அதிபர் திரு. லலித் பெர்னுண்டோ பேசுகையில் கூறியதாவது: "எமது கூட்டுத்தாபனத்தில் ஸ்தலஅதிபராக திரு. சபாரத்தினம் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே அவரது திறமையால் பல அபிவிருத்திகளைக் கண்டுள்ளோம். தொடர்ந்தும் அவர் சேவையைப் பெறமுடியாதது எமக்கு மிகவும் கவலையைத் தருகிறது. இருந்தும் புதிய அதிபரும் சகல வழிகளிலும் அபிவிருத்திகளை ஈட்டுவார்"

திரு. ஆர். நாகராசா, திரு. எஸ். சோமசிறி உட்படப் பலர் உரையாற்றினர். (க-ஈ)

ரூ. 21,000 நகை திருட்டு:

# பரு. நீதவான் முன் இன்று சந்தேகநபர்கள் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் தெற்கில் நடந்த 21,000 ரூபா நகை திருட்டு தொடர்பாக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ள இருசந்தேகநபர்களும் இன்று பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்படுவர்.

இரு சந்தேகநபர்களையும் யாழ். விசேட துப்புத் துலக்கும் பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் கபிரியல்பிள்ளை தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் கைதுசெய்ததுடன், திருட்டுப்போன நகைகளின் பெரும்பகுதிகளையும் கைப்பற்றினர்.

அல்வாய் தெற்கைச்சேர்ந்த ராசதுரை கமலாவதி என்பவரின் நகைகள் திருட்டுப்போனதாக கடந்த மாதம் 6ம் திகதி பருத்தித்துறை பொலிஸில் புகார் செய்யப்பட்டது. திருட்டுப்பற்றி எவ்வித தடயங்களும் கிடைக்காததைத் தொடர்ந்து இம்மாதம் 9ம் திகதி இத் திருட்டுப்பற்றி பொலிஸ் அதிபர் மூலம் யாழ் விசேட துப்புத்துலக்கும் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது.

சார்ஜன்ட் கபிரியல்பிள்ளை தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் இத்திருட்டு தொடர்பாக துப்புத்துலக்க ஆரம்பித்தனர்.

சந்தேக நபர் ஒருவரின் வீட்டில் புகையிலைச் சிப்பத்தின் உள்ளே புதிய தாலிக்கொடி ஒன்று ,மறைத்து வைக்கப்பட்டிருந்ததைக கண்டுபிடித்தனர். இதைத் தொடர்ந்து உருக்கிய நிலையிலும் திருடப்பட்ட சில நகைகளையும் பொலிசார் கைப்பற்றியதுடன், விசாரணையைத் தொடர்ந்து மற்றொரு சந்தேகநபரையும் கைதுசெய்தனர்.

சந்தேக நபர்களானகோபாலகிருஷ்ணன், சச்சிதானந்தன் ஆகியோர் பருத்தித்துறை நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டு இன்றுவரை ரிமாண்டில் வைக்கப்பட்டனர். (க-உ)

## பரீட்சை இலாகா ஆணைப் பெண்ணாக்கியுள்ளதாம்

(நெல்லியடி)

அண்மையில் நடைபெறவிருக்கும் க. பொ. த. சாதாரண பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தை எதிர்பார்த்திருந்த பரீட்சார்த்தி ஒருவர் அனுமதிப்பத்திரம் கிடைத்ததும் அதிர்ச்சிக்குள்ளானுர். அனுமதிப்பத்திரத்தில் பெயர் மாற்றத்திற்குள்ளாகி இருந்ததே அப்பரீட்சார்த்திக்கு அதிர்ச்சியையும் கவலையையும் அளித்துள்ளது.

இ. செல்வராஜா என்ற கல்வத்தை, வதிரியைச் சேர்ந்தவர்க்கே செல்வரதி என பெயர் மாற்றத்துடன் அனுமதிப்பத்திரம் கிடைத்துள்ளது. பரீட்சார்த்தி என்ன செய்வதென்று தெரியாமல், தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினரிடம் புகார் செய்யவுள்ளதாகத் தெரிவித்தார். (உ)

## காவலாளி வெட்டிக் கொலை

(கொழும்பு)

மாதம்பை பொலிஸ் பகுதியில் உள்ள மிரிஸ்வத்தை தோட்ட உரிமையாளரும், இரு காவலாளிகளும் இனந்தெரியாத மூன்று இளைஞர்களால் வாளால் வெட்டப்பட்டனர்,

வாள் வெட்டுக்கு இலக்கான காவலாளிகளில் ஒருவர் உயிரிழந்தார்.

துப்பாக்கி ஒன்றும் இத்தோட்டத்தில் இருந்து திருடப்பட்டுள்ளது. (உ)

ஈழநாடு
The Eelanaadu

## ஓராண்டுக்குள்...!

ஓராண்டுக் காலத்தில் அரசாங்கத்தின் சாதனைகளையும் பெறுபேறுகளையும் தீர்மானித்துவிட முடியாது என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கண்டியில் சென்ற சனிக்கிழமை நடந்த ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த முதலாண்டு நிறைவையொட்டி நடந்த மரம் நாட்டு வைபவத்தில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்றல்ல, ஆறு வருடங்கள் என்பதையும் அரசியல் எதிரிகளுக்கும் அரசாங்கத்தைக் கண்டிப்பவர்களுக்கும் ஜனாதிபதி நினைவூட்டியிருக்கிறார்.

ஆறுவருடங்களிலும் ஒவ்வொரு வருடத்தின் முடிவிலும் அந்தந்த வருடத்தில் அரசாங்கம் என்ன செய்தது என்பதையும் ஒவ்வொரு அமைச்சும் அந்தந்த வருடத்தில் சாதித்தவைகள் என்ன என்பது பற்றியும் மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்,

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பிரதமராகவும் பின்னர் செயலதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் பதவியேற்றபின் பல திட்டங்களை வெளியிட்டு வந்திருப்பதுடன் சிலவற்றைச் செயல்படுத்தவும் முனைந்திருக்கிறார்.

எம். பிக்கள், பிரதிஅமைச்சர்கள், அமைச்சர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கநெறிக் கோவையைக் கொண்டுவந்தார். ஜனாதிபதி பதவியிலிருப்பவர் பின்பற்றவேண்டிய பத்துக் கட்டளைகளையும் ஜனாதிபதி பிரகடனம் செய்திருந்தார்.

இவை தவிர முன்னைய ஆட்சிக்காலத்தில் பல்வேறு துறைகளிலும் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட ஊழல் புகார்களை விசாரணைசெய்து தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக பல்வேறு விசாரணைக்கமிஷன்களை நியமித்திருக்கிறார்.

சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நிகழ்ந்த வகுப்புக்கலவரம்பற்றி விசாரணை செய்வதற்கு ஒரு கமிஷனை நியமித்து இப்போது விசாரணை நடைபெற்று வருகிறது.

ஊழல்களில் ஈடுபட்டோரைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதுமட்டுமன்றி இனியும் இப்படியான ஊழல்கள் இடம்பெருமல் தடுப்பதும் விசாரணைக்கமிஷன்கள் நியமிக்கப்பட்டதற்கு ஒரு காரணமாகும்.

இனக்கலவரம் இனியும் இந்நாட்டில் ஏற்படாமல் தடுப்பதற்கும் ஆகஸ்ட் கலவரம்பற்றிய விசாரணை வழிவகுக்கும்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன மிகவிரைவில் புதிய அரசியல் அமைப்பு ஒன்றையும் கொண்டுவரவிருக்கிறார்.

இது வேறெந்த நாட்டுத் திட்டத்தையும் தழுவியதாக இருக்கமாட்டாதென்றும் எமது நாட்டின் பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றின் அடிப்படையில் எமது நாட்டுக்கு ஏற்ற விதத்தில் இப்புதிய அரசியல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றும் ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

சகலரும் சமத்துவமாக வாழ வேண்டுமென்பதும் இதற்கு வழி வகுப்பதே தமது இலட்சியமென்றும் ஜனாதிபதி பல தடவைகளிலும் கூறி வந்திருக்கிறார்; கூறி வருகிறார்.

கடந்த சுமார் கால் நூற்றாண்டு காலமாக அதிகாரப்போட்டியிலும் பதவிப்போட்டியிலும் வகுப்புத்துவேஷமே வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. அது விதைத்த காலத்திலிருந்து இன்று பெரு விருட்சமாக வளர்ந்துள்ளது.

இதை வேருடன் களைவதென்பது சுலபமான காரியமல்ல. இன ஒற்றுமை இல்லாமல் நாடு முன்னேற முடியாதென்பதை ஜனாதிபதி நன்கறிவார். அந்த ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் அவர் இறங்கியிருக்கிறார். ஆறு ஆண்டுகளுக்குள் அவர் ஓரளவாவது இதில் வெற்றி பெறுவாரென்று எதிர்பார்ப்போம்.

# “இலட்சியங்களை வென்றெடுக்க குடியுரிமையைத் துறக்கவும் தயார்”

## உடுப்பிட்டியில் நல்லூர் ‘சிவா’

(நெல்லியடி)

“தனிநாடு கோரிக்கையை வென்று எடுப்பதற்காக பத்து ஆண்டுகள் சிறைசெல்லவும் எமது குடியியல் உரிமைகளை இழக்கவும் நாம் தயார். சட்டங்களுக்கு அஞ்சி எமது பாதையை மாற்றவோ இலட்சியத்தைக் கைவிடவோ நாம் தயாரில்லை.”

மேற்கண்டவாறு நல்லூர்த் தொகுதி எம். பி. யும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவருமான திரு. மு. சிவசிதம்பரம், உடுப்பிட்டி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. த. இராசலிங்கத்திற்கு அல்லையம்பதி மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

சிவகுமார் அரங்கில் திரு. ச. செந்துராஜா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

“தமிழர் விடுதலைக் கூட்டணி கடந்த தேர்தலில் பல சாதனைகளைப் புரிந்துள்ளது. அச்சாதனைகளுக்கு உடுப்பிட்டியில் திரு. த. இராசலிங்கம் பெற்ற வெற்றி சிகரம் வைத்தாற்போன்றதாகும். அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்திற்குக் கிடைக்காத வெற்றி இவருக்குக்கிடைத்தது பாராட்டத்தக்கதாகும். உடுப்பிட்டி மக்கள் சமுதாயப் புரட்சியை கடந்த தேர்தலில் ஏற்படுத்தியது தமிழ் மக்களின் ஒற்றுமையின் பலத்தை எடுத்துக்காட்டுவதாகும்.

“திரு. இராசலிங்கம் தேசிய அரசுப்பேரவையில் கடந்த ஓராண்டு காலமாக ஆணித்தரமான கருத்துக்களை கூறி வருகின்றார். சிங்களப் பிரதிநிதிகள் கூடச் செவிமடுத்து அவர் பேச்சைக் கேட்கின்றார்கள். கூட்டணியிலுள்ளவர்களில் திரு. இராசலிங்கம் கல்வித்தகைமையில் கூடியவர் என்பது எமக்கு மன மகிழ்வை ஏற்படுத்துகின்றது.”

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் தெரிவித்தாவது:

### பேச்சுத்திறமை மிக்கவர்

ஆட்சிமன்றத்தில் வரவு-செலவுத்திட்ட விவாதத்திலும் பின்பும் திறமையாக திரு. இராசலிங்கம் உரையாற்றியுள்ளார். அவரை உடுப்பிட்டித் தொகுதி மக்கள் தெரிவுசெய்தது பாராட்டத்தக்க விஷயமாகும். சேவை மனப்பான்மைகொண்ட திரு. இராசலிங்கம் அண்மையில் ஆட்மன்றத்தில் ஆற்றிய உரை தமிழர்களின் ஒற்றுமையைச் சிதைக்கமேற்கொள்ளப்பட்ட முயற்சியைச் சிதறடித்தது.

### தென்னிலங்கையில் அரசுக்கெதிரான சக்திகள்

“ஆளும் கட்சிக்கு எதிராகத் தென்னிலங்கையில் புதிய சக்திகள் உருவாகி வருகின்றன. எதிர்பார்க்கப்படும் மாவிலை அதிகரிப்பைத் தொடர்ந்து இப்புதிய சக்திகள் மேலும் பலமடையும். அரசாங்கத்திற்கு நெருக்கடிகள் தோன்ற இடமுண்டு. இச்சந்தர்ப்பத்தில் நம்மையும் அரசாங்கம் நோக்கவேண்டியேற்படும். இப்படியான சமயத்தில் நம்மை நாம் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும்.”

வாலிபர் ஒருவரின் கேள்வியைத் தொடர்ந்துஉணர்ச்சி

[5-ம் பக்கம் பார்க்க ]

பெண், பிள்ளைகளைத் தாக்கிய

# குண்டர்களை கத்தியுடன் விரட்டினார் சிங்கள மூதாட்டி

(கண்டி)

“என்னையும் எனது மனைவியையும் தாக்குவதற்கு வந்த குண்டர்களை, கத்தியுடன் வந்த சிங்கள மூதாட்டி ஒருவர் விரட்டினார்” என்று சன்சோனிக்கமிஷன் விசாரணையில் பூசம்பிட்டியாவைச் சேர்ந்த பெரி ஐயா என்பவர் சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

“ஆகஸ்ட் 18ம் திகதி வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தபோது அக்குத்தன்னை என்ற இடத்தில் வழிமறித்து இருவர் தாக்கினர். அவர்களைக் கும்பிட்டுவிட்டு வீட்டுக்கு ஓடினேன். வீட்டில் இருந்த எல்லோரையும் வெளியே ஓடச்சொன்னேன். வீட்டிற்கும் அக் கூட்டத்தினர் வந்ததாலேயே இப்படிச் சொன்னேன். அப்போது வீட்டில் இருந்த எனது மருமகள் குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஓடினார். நானும் மனைவியும் வீட்டில் இருந்தோம். ஓடிய மருமகளையும் பிள்ளைகளையும் வழிமறித்த கூட்டத்தினர் தொல்லை கொடுத்தனர். இதனால் அவர்கள் கூக்குரலிட்ட

[4-ம் பக்கம் பார்க்க]

சன்சோனிக் கமிஷன்

# “குண்டர்கள்தம் பலத்தை மாடுகள் மீதும் காட்டினார்”

## 71 வயது மூதாட்டி சாட்சியம்

(கண்டி)

“குண்டர்கள் கொள்ளையடித்தபின் மாடுகளையும் தாக்கினார்கள்” என்று கண்டியில் நடைபெற்றுவரும் சன்சோனிக் கமிஷன் விசாரணையில் கட்டுகாஸ்தோட்டையைச் சேர்ந்த திருமதி எஸ். பொன்னம்மா (71 வயது) சாட்சியமளிக்கையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது.

“கடந்த ஆகஸ்ட் மாதம் பகல் சுமார் 60 பேர் பலாத்காரமாக எமது வீட்டினுள் நுழைந்தார்கள் நாம் பயத்தினால் வெளியேறி ஓடினோம். நாம் பயந்து ஓடிய போது அயலவரான சில்வா என்பவர் தடுத்து நிறுத்தி ஆறுதல்சொல்லி அவரது வீட்டுக்குக் கூட்டிச்சென்று தகுந்த பாதுகாப்புத் தந்தார்.

(5-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

எவனுடைய இதயம் ஏழைகளின் இன்னலைக் கண்டு இரங்கி அழுகின்றதோ அவனையே நான் மகாத்மா என்பேன்.

--சுவாமி விவேகானந்தர்

“பாரதத்தில் பன்னிரு நாட்கள்”

வி. பி.யின் பயணக் கதை

“பாரதத்தில் பன்னிரு நாட்கள்

நாளை 26-7-78 ‘ஈழநாடு’ இதழில் ஆரம்பமாகிறது.

‘நாடக, அரங்கக் கல்லூரி’ யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சில மாதங்களுக்கு முன்னர் சில கலைஞர்களின் பெருமுயற்சியுடன் ஆரப்பிக்கப்பெற்று இன்றுவரை சளைக்காமல் அவர்கள் சுறுசுறுப்புடன் செயலாற்றி வருகின்றார்கள்.

தமிழ் நாடகப் பயிற்சிக் கல்லூரியொன்று இலங்கையின் சரித்திரத்திலேயே ஆரம்பிக்கப் பெற்றிருப்பது இப்போதுதான்.

இந்த நாடக, அரங்கக் கல்லூரி சென்ற சனிக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் இளவாலை சென்ஹென்றீஸ் கல்லூரியில் களப்பயிற்சியும் கருத்தரங்குகளும் நடத்தியது.

கருத்தரங்குகளில் பல்துறைகளையும் சேர்ந்த அறிஞர்கள் கலந்துகொண்டு கருத்துப்பரிமாறிக்கொண்டனர்.

களந்பயிற்சிகள் சிலவற்றைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அது பெரிய உடற்பயிற்சி. அந்தப் பயிற்சிகளைப் பார்த்தபோது நாடகம்தானே, வசனத்தைக் கொஞ்சம் பாடமாக்கிவிட்டால் ஊமாய்த்துவிடலாம் என்று சிலரைப்போல் நினைத்திருந்த எனக்கு அந்த எண்ணத்தையே மறக்கச்செய்து விட்டது.

அரசன் உதவியின்றித்தமிழ் நாடகத்தைச் சிறந்த முறையில் நல்ல கட்டுக்கோப்பாக உருவாக்க வேண்டுமென்ற உண்மையான நோக்கத்துடன் மட்டும் உழைத்துவரும் கலைஞர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இந்த நல்ல முயற்சியில் தங்களை அர்ப்பணித்துள்ள திரு. தார்சீசியஸ், திரு. சண்முகலிங்கம், விதானையார் செல்வரத்தினம், அரசு, லோகு போன்றவர்களின் உழைப்பின் பலனை இன்னும் இரண்டுவருடங்களில் தமிழ் மக்கள் தெரிந்துகொள்வார்களென்பது நிச்சயம்.

இந்த இரண்டுநாள் நிகழ்ச்சிகள் பற்றிய விரிவானசெய்திகளை விரைவில் தொகுத்துத் தரலாமென்று நினைத்திருக்கிறேன்.

ஃ ஃ ஃ

கொக்குவில் இந்துக்கல்லூரியில் சமீபத்தில் இளம் விவசாயிகள் கழகப் பொருட்காட்சியொன்று நடைபெற்றது.

அங்கு காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஒரு முயலையும், அதன் ஏழு குட்டிகளையும் ‘பெரிய மனசுள்ள புண்ணியவான்கள்’ யாரோ அபகரித்துச் சென்றுவிட்டனராம்! இதுமட்டுமல்ல. தால காவலர் திரு. க. கனகராசா இரவலாக வழங்கிய ‘மரம் நாட்டும் இயக்கப் பிரச்சார சேலை’ ஒன்றையும் எடுத்துச் சென்றுள்ளனராம்.

பல முயற்சி எடுத்துச் செய்த இவ் விழாவுக்கு இப்படிப்பட்ட புண்ணியவான்களின் கைங்கரியத்தை என்னவென்று சொல்வதென வேதனைப்படுகிறார் பொருட்காட்சிக்குழுச் செயலாளர் திரு. ரவிச்சந்திரன்.

-- ஊர்சுற்றி

## சாவகச்சேரியில் குமாரசாமி பிறந்ததினம்

(யாழ்ப்பாணம்)

அமரர் வே. குமாரசாமியின் பிறந்ததினம் இம்மாதம் 30 ம் தேதி காலை சாவகச்சேரி சரஸ்வதி பூங்காவில் நடைபெறவிருக்கிறது.

குமாரசாமி அறங்காவல் குழுத் தலைவர் திரு. இ. த. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் திரு. குமார் பொன்னம்பலம், சட்டத்தரணி ஈ. டபிள்யூ. தேவராஜன், சட்டத்தரணி கே. எஸ். மகேசன் ஆகியோர் உரையாற்றுவார்கள் (-க. அ)

# கார்ட்டர் -- பிரஷ்னேவ் விரைவில் சந்திப்பர்

## யு. எஸ். -- ரஷ்ய உறவில் புதியசகாப்தம் மலரும் என்கிறார் சைரஸ்வான்ஸ்

வாஷிங்டன், ஜுலை 24 அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டரும் சோவியத் அதிபர் திரு. பிரஷ்னேவும் விரைவில் சந்தித்துப் பேச்சு நடத்தக்கூடிய சாத்தியக்கூறு தோன்றியுள்ளளதாக அமெரிக்க வெளி விவகார அமைச்சர் திரு. சைரஸ்வான்ஸ் தொலைக்காட்சியில் அளித்த விசேஷ பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இவர்கள் இருவரும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தும் பட்சத்தில் இரு நாடுகளுக்குமிடையே இருந்து வரும் மனக்கசப்பு நீங்கிவிடும் என்றும் இருநாடுகளுக்குமிடையிலான உறவில் புதிய சகாப்தத்தில் ஒன்று ஆரம்பிக்கப்படும் என்றும் திரு. வான்ஸ் நம்பிக்கை தெரிவித்தார்.

## மொரார்ஜி- கிருபளானி கலந்துரையாடினர்

புதுடில்லி, ஜுலை. 24 புதுடில்லி வந்துள்ள ஆச்சார்யா கிருபளானி, நேற்றிரவு பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயுடன் ஜனதா கட்சிக்குள் அண்மையில் ஏற்பட்ட நெருக்கடி குறித்து கலந்துரையாடினர்.

பிரதமர் அளித்த இரவு விருந்தில் கலந்துகொண்ட பின்னரே இவர்கள் இருவரும் பேச்சு நடத்தினர். (இ)

## அண்ணன் கண்டிப்பு: தம்பி உயிர் மாய்த்தார்

### நாரந்தனையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஒருவர் அண்ணன் கண்டித்ததால் மனமுடைந்த தம்பி நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்

நாரந்தனையைச் சேர்ந்த கந்தையா சற்குணநாதன் (15 வயது) என்பவரின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

புகையிலைக்கு தெளிக்கவைத்திருந்த நச்சுத் திராவகத்தை அருத்தினார் எனக் கூறப்பட்டது. விசாரணை முடிவில் தற்கொலைஎனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ந-உ)

பெற்றோர் எதிர்ப்பு

## மணமானவரைக் காதலித்த யுவதி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

திருமணமாகி மனைவியைப் பிரிந்திருந்த இளைஞர் ஒருவரை காதலித்த 21 வயது இளம்பெண், பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்ததால் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த சின்னபபு சாந்தியின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

சாந்தியின் காதலை பெற்றோர் விரும்பாததனாலும் காதலனை சகோதரர்கள் தாக்கப்போவதாகப் பயமுறுத்தியதாலும் மனமுடைந்து தற்கொலை செய்தார் என விசாரணையில் தெரியவந்தது.

மயங்கிய நிலையில் முற்றத்தில் நின்ற சாந்தியை யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்குஅவர் மரணமானார் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (உ)

இரு நகரங்களைத் தருமாறு

## எகிப்து விடுத்த கோரிக்கை: இஸ்ரேலினால் நிராகரிப்பு

ஜெருஸலம், ஜுலை, 24 சைனாய் பாலைவனப் பிரதேசத்தில் நல்லெண்ணத்துக்காக இரண்டு நகரங்களைத் திருப்பித் தருமாறு எகிப்து விடுத்த கோரிக்கையை இஸ்ரேல் நிராகரித்துள்ளது.

எகிப்தின் இக்கோரிக்கையை இஸ்ரேலிய அமைச்சரவை நீண்டநேரமாக ஆராய்ந்தது.

எகிப்தின் கோரிக்கையை நிராகரித்தமை பற்றி இஸ்ரேலியப் பிரதமர் கருத்துத் தெரிவிக்கையில், எதையும் கொடுக்காமல் எவருமே பதிலுக்கு எதையும் பெற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்தார். (இ)

## காங்கிரஸிலிருந்து வெளியேற்றம் முடிவை மறுபரிசிலனை செய்யவும்

### மகாராஷ்டிர முதல்வர் கோரிக்கை

புதுடில்லி, ஜுலை 24 இந்தியாவின் இன்றைய பிரச்னை எதேச்சாதிகாரமே ஒத்தகருத்துடைய கட்சிகள் ஒன்றிணைந்து எதேச்சாதிகாரத்தை எதிர்க்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

இவ்வாறு மகராஷ்டிரத்தில் அண்மையில் பதவியேற்ற முதல்வர் திரு. சரத்பவார் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியிலிருந்து அண்மையில் வெளியேற்றப்பட்ட திரு. பவார், தம்மைக் கட்சியிலிருந்து வெளியேற்றுவது என்று காங்கிரஸ் காரியக்கமிட்டி எடுத்த தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுமாறு அக்கமிட்டிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

நாட்டில் ஏதேச்சாதிகாரப் போக்கை வலுப்படுத்ந நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்று திரு. பவார், தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளாக. (இ)

சுன்னாகம் கொலைவழக்கு:

## சொய்சா வரவில்லை; விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கொலை வழக்கு நேற்று யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, ஆகஸ்ட் 11 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கில் 75 ம் ஆண்டு செப். 11 ம் தேதி சுன்னாகத்தில், எஸ். செல்லத்துரை என்பவரைக் கொலை செய்ததாக சந்திரகுமார் அல்லது சந்திரன், செல்லத்துரை செல்வக்குமார் அல்லது தம்பர், சீனியப்பா நாகலிங்கம், சந்தையா விஷ்ணுமூர்த்தி அல்லது சொக்கலிங்கம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ஏ. சி. டி. சொய்சா நேற்று வரவில்லை நேற்று எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினமும், அரசதரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமாரும் ஆஜரானார்கள். (ச-அ)

"மத்திய கமிட்டிமூலம்

## தேவைகளை நிறைவேற்ற முயற்சி எடுப்போம்"

(யாழ்ப்பாணம்)

"சாவகச்சேரித் தொகுதி ஐக்கியதேசியக் கட்சி மத்திய கமிட்டியும், 7 கிளைகளும், தலைமைப்பீடத்தினால் அங்கீகரிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளன இம்மத்திய கமிட்டிமூலம், இப்பகுதித் தேவைகளை நிறைவேற்ற முயற்சிப்போம்"

சாவகச்சேரித் தொகுதி ஐ. தே, கட்சி மத்திய கமிட்டியின் முதலாவது கூட்டத்தில் பிரதமரின் இணைப்பு உத்தியோகத்தரும் மத்திய கமிட்டிச் செயலாளருமான திரு. சி. சண்முகலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரியிலுள்ள யூ. என். பி. மத்திய கமிட்டிக் காரியாலயத்தில் தலைவர் சட்டத்தரணி வி. பி. கார்த்திகேசு தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

ஆகஸ்ட் 5ம் தேதி கொழும்பில் நடைபெறும் யூ.என். பி. கூட்டத்திற்கு ஐவரைக் கொண்டகுழுவை அனுப்புவதென முடிவுசெய்யப்பட்டது. (க-அ)

## குண்டர்களை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

னர். நானும் மனைவியும் ஓடினேம். அப்போது கத்தியுடன் வந்த சிங்கள மூதாட்டி தாக்கியவர்களை விரட்டினார். பின் எனக்கு தலையில் வெட்டு விழுந்தது. எனது வீடும் கொள்ளையிடப்பட்டது எனக்கு இப்போது நிரந்தர இடமில்லை. கமிஷன்தான் உதவவேண்டும்" என்றார். (உ)

# வட இந்திய மாநிலங்களில் பெரும் வெள்ளப்பெருக்கு!

## 120 பேர் பலி!! 60 லட்சம்பேர் பாதிப்பு !!!

புதுடில்லி, ஜுலை 24 வட இந்தியமாநிலங்களான உத்தரப்பிரதேசம், பீகார், ராஜஸ்தான். மத்தியப்பிரதேசம் ஆகிய இடங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாக 10 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 120 பேர் பலியாகினர் என்றும் அறிவிக்கப்பட்டது.

வெள்ள நிலைமை மேலும் மோசமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

8 கோடி ரூபா பெறுமதியான பயிர்கள் வெள்ளப் பெருக்கினால் நாசமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது-

உத்தரப்பிரதேசத்திலேயே வெள்ளப்பெருக்கு பெரும் மோசமாகியுள்ளது என்றும் இம்மாநிலத்திலேயே ஆகக்கூடுதலாக 69 பேர் பலியாகியுள்ளனர் என்றும் 5 ஆயிரம் கிராமங்கள் பாதிக்கப்பட்டு 2 லட்சம் மக்கள் வீடிழந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ)

## வீடமைப்புச் சங்கங்கள் மீண்டும் கூடுகின்றன

(யாழ்ப்பாணம்)

கைதடி வீடமைப்புத்திட்டத்தின் விசேஷ பொதுக்கூட்டம் இம்மாதம் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ், ஆனைப்பந்தி உயர்கலைக்கல் லூரியில் நடைபெறுகிறது,

இக்கூட்டத்தில் கடந்த மாதம் 10ந்திகதிய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்பற்றி மீள ஆலோசிக்கப்படும். கடந்த கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

'கைதடி வீடமைப்புத்திட்ட அங்கத்தவர்கட்கு வழங்கப்பட்ட காணித்துண்டுகளில் அரசாங்கமே வீடுகளைக்கட்டி அங்கத்தவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.'

'கைதடி வீடமைப்புத்திட்ட அங்கத்தவர்கள் ஒன்றுசேர்ந்து அரசாங்கத்திடமிருந்து கடன் பெற்று வீடுகளைக்கட்டுவது'

### வடஇலங்கை வீடமைப்புச் சங்கம்

வடஇலங்கை வீடமைப்புச் சங்கத்தின் விசேஷ பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது. அன்று காலை 9மணிக்கு இக்கூட்டம் ஆனைப்பந்திஉயர் கலைக்கல்லூரியில் நடைபெறும்

"வடஇலங்கை வீடமைப்புச்சங்கத்திற்கென சுவீகரிகப்பட்ட காணியில் அங்கத்தவர்களுக்குரிய பகிர்ந்தளிப்பதற்கென அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட புளக் அவுட்பிளானில் கூடியளவு மாற்றம் இல்லாமல் காணித்துண்டுகளில் அரசாங்கமே வீடுகளைக்கட்டி, காணி உரிமையுள்ள அங்கத்தவர்களுச்கு வழங்கவேண்டும்' என்ற கடந்தகூட்டத் தீர்மானம் இக் கூட்டத்தில் மீள பரிசீலனை செய்யப்படும். [அ]

# நாளை மதுரை மாநகராட்சி தேர்தல்!

## 65 தொகுதிகளில் 426 பேர் போட்டி

சென்னை, ஜுலை. 24 தமிழ் நாட்டில் அரசியல் கட்சிகளின் இன்றைய செல்வாக்கைப் பிரதிபலிக்கும் மதுரை மாநகராட்சி மன்றத் தேர்தல் நாளை புதன்கிழமை நடைபெறுகிறது.

தமிழக முதல்வர் திரு. எம், ஜி. இராமச்சந்திரன் தலைமையிலான அ. இ. அ. தி. மு. க. அரசின் ஓராண்டுகால ஆட்சி குறித்து 4 லட்சத்து 62 ஆயிரம் மதுரை மக்கள் இத்தேர்தலில் தமது தீர்ப்பை அளிப்பர்.

இத்தேர்தலில் 65 தொகுதிகளில் சுயேச்சை வேட்பாளர்கள் உட்பட 426 பேர் போட்டியிடுகின்றனர்.

### அதிக பெண் வாக்காளர்

இத்தொகுதி வாக்காளர்களில் ஆண் வாக்காளர்களை விட பெண் வாக்காளர்கள் 15 ஆயிரம் பேர் அதிகம்.

இத்தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| இந்திரா காங்கிரஸ் | - 58 |
| தி. மு. க. | - 53 |
| ஜனதா | - 48 |
| அ. இ. அ. தி. மு. க. | - 47 |
| இந்திய தேசிய காங்கிரஸ் | - 16 |
| மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் | - 11 |
| இந்திய கம்யூனிஸ்ட் | - 06 |
| முஸ்லிம் லீக் | - 06 |
| இதர கட்சிகள் | - 14 |
| சுயேச்சைகள் | - 166 |

இத்தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிகளுடனும், தி. மு. க., முஸ்லிம் லீக், பார்வாட் புளக் ஆகிய கட்சிகளுடனும் இணைந்து போட்டியிடுகின்றன. (இ)

**Rio** (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
3rd DIAMOND WEEK
Peter Fonda,
DIAMOND MERCENARIES

**நாகம்ஸ்** (சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
முத்துராமன்
சுஜாதா - பத்மப்பிரியா
**உறவுசொல்லஒருவன்**

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
**நினைத்ததை முடிப்பவன்**
(புதிய-பிரதி கலர்)

**REGAL** Jaffna
Daily at 4-45, 7- & 9-30 p m only.
James Bolam, Rodney Bewes
in
**THE LIKELY LADS**
(color)

**சாந்தி** யாழ்நகர். போன்: 7612
தினசரி 4 காட்சிகள்
**Carry on Girls**
28-7-78 முதல்
**தெய்வம் தந்த வீடு**
சினிமாஸ்கோப் புதிய வெளியீடு

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
நடித்த
**படித்தால் மட்டும் போதுமா**
(புதியபிரதி)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
**பேரும் புகழும்**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - கே.ஆர்.விஜயா
(புத்தம் புதிய பிரதி) **பட்டணத்தில் பூதம்**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
**மன்மத லீலை**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — வாணிஸ்ரீ
**நிறைகுடம்**

**லிடோ** (யாழ்.நகர்)
போன்: 7692
சிவகுமார், அல்கா
**மதனமாளிகை**

## கியூபா மகாநாட்டில் பங்குபற்றுவார்

(யாழ்ப்பாணம்)

கியூபாவில் நடைபெறவிருக்கும், உலக வாலிபர் மாநாட்டில் இலங்கையிலிருந்து செல்லும் சமசமாஜக்கட்சிப்பிரதிநிதிகளில் ஒருவராக திரு. வி. நடராசாபங்கு பற்றுவார்.

கடந்த பொதுத் தேர்தலில் கோப்பாய்த் தொகுதியில் போட்டியிட்ட இவர், துணுக்காய்ப் பகுதி ப. நோ. கூ. சங்கம், பாண்டியன்குளம் கமத் தொழில்சேவை நிலையம் ஆகியவற்றின் முன்னாள் தலைவராவார்.

நாவற்குழியைச் சேர்ந்த இவர் நாவற்குழி கிழக்கு காந்தி சனசமூக நிலைய போஷகராகவும் உரும்பராய் நவசக்தி சனசமூக நிலைய தலைவருமாவார். (க-அ)

## கிளிநொச்சியில் கம்யூ.கட்சிவிழா

(உருத்திரபுரம்)

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 35வது ஆண்டுவிழா மூன்றுதினங்கள் கிளிநொச்சியில் கொண்டாடப்பட்டன.

இந்த விழாவில் கட்சியின் விளக்கக் கருத்தரங்குகள், விவசாயிகள், தொழிலாளர்களுடன் கலந்துரையாடல் என்பன இடம்பெற்றன.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி 35ம் ஆண்டு நிறைவு தினப் புத்தகம் ஒன்றும் வெளியிடப்பட்டது.

இவ்விழாவிற்கு கொழும்பில் இருந்து கட்சிப்பிரமுகர்கள் திரு. டி. இ. அல்விஸ், திரு. எம். ஈ.யூசுப், யாழ்ப்பாணத்தில் இருந்து திருவாளர்கள் க. நவரத்தினம், எம். சி. சுப்பிரமணியம், சி. இராசதுரை, எம. கனகசபாபதி ஆகியோர் வந்திருந்தனர். தொகுதியின் கம்யூனிஸ்ட்கட்சிச் செயலாளர் திரு. அ. தமோதரம்பிள்ளை இவ்விழாவிற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார். (உ)

## இலட்சியங்களை...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

வசப்பட்ட நிலையில் 'அமிர்' சொற்பொழிவாற்றினார். அவர் தமது உரையில்தெரிவித்ததாவது:

### வேதனைதரும் விஷயம்

''எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் எனக்குக் கார் வசதிசெய்துதரப்பட்டுள்ளது. தமிழன் என்பதற்காகவல்ல. இது எங்ஙனம் சலுகையாகும்? இது சிங்கள அரசாங்கத்தின்பணத்திலல்ல; தமிழ் மக்களின் வரிப்பணமே என்பதை எவரும்மறக்கக்கூடாது. சிங்களவர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தால் கார் பாவிக்க அல்லது பெற முடியுமானால் தமிழன் ஏன் பெற்றுக்கொள்ளக் கூடாது? எனது உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் சதித்திட்டங்கள் தெரியவந்த இந்தவேளையிலும் இளைஞர்கள் இவ்வாறு சிந்திப்பது வேதனைக் குரியதாகும்.

''சில இளைஞர்கள் எம்மை ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதாக எண்ணுகின்றார்கள். தேசியஅரசுப்பேரவையில்நாம் படும்பாட்டை அறிந்தால் அவ்வாறு கருதமாட்டார்கள்.

''கடந்தஆண்டுதிட்டமிட்டு நடைபெற்ற இனக்கலவரத்தால் எமது தமிழ்ப்பகுதியை நோக்கித் தமிழ்மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை அரவணைத்து ஒத்துழைப்பு வழங்கி வரவேற்க வேண்டும். எமது மண்ணுக்காகப் போரிட்டு மாள நேரிட்டாலும் பரவாயில்லை. மண்ணைக் காக்கப் போரிடும் போரே புனிதமான போராகும்.''

திரு. கோவை மகேசன், யாழ். தேசியஅரசுப் பேரவை உறுப்பினர்திரு.வெ.யோகேஸ்வரன், பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. க. துரைரரத்தினம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திரு. சபா செந்துராஜா, திரு. எஸ். மகேந்திரன் ஆகியோரும் உரைநிகழ்த்தினார்கள். திரு. இராசலிங்கம் எம். பி. நன்றி தெரிவித்துப் பேசினார். (அ)

## குண்டர்கள்தம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

''எமது வீட்டில்கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் எவையும் மீட்கப்படவில்லை. எனக்கு 45,000 ரூபா நஷ்டமேற்பட்டது'' என்றார்.

# செய்திச் சுருக்கம்

### ''சாட்சியமளிக்க விருப்பமா?''

(கொழும்பு)

சன்சோனிக்கமிஷன் விசாரணை ஆகஸ்ட் மாதம் 7ம் திகதி கொழும்பில் நடைபெறவிருப்பதால் கமிஷன் முன் சாட்சியமளிக்க விரும்புவோர் செயலாளர், அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் 676, காலி றோட் கொள்ளுப்பிட்டி என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### சீன விவசாயமுறை

(கொழும்பு)

சீனநாட்டு விவசாயமுறை பரீட்சார்த்தமாக இலங்கையில் அமுல்செய்யப்படவிருக்கிறது,

இவ்வருட இறுதியில் 1000 ஏக்கரில் இப் பரீட்சார்த்த முறை கடைப்பிடிக்கப்படும்.

### ''விலைவாசி குறைப்பு நீண்டகால நடவடிக்கை''

(கொழும்பு)

''விலைவாசியைக் குறைப்பதென்பதுதிடீரென்று சாதித்துவிடக்கூடிய ஒன்றல்ல. அது ஒரு நீண்டகால நடவடிக்கையாகும்'' என்று வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத்முதலி இலங்கை மன்றக்கல்லூரியில் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் சொன்னார்.

### பொலிஸ் உதவி நாடப்படும்

(கொழும்பு)

இ. போ. பஸ்களில் ஒளிப் பயணிகளைப் பிடிப்பதற்கு பொலிசாரின் உதவியைப் பெறுவதென போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். மொகமத் தீர்மானித்திருக்கிறார்.

நகர்ப்புறங்களிலேயே இக் குற்றம் அதிகரித்துவருகிறதாம்.

### சீரமைப்பு

(முன்னேஸ்வரம்)

அரசாங்கத்தின் விவசாயத் திட்டத்திற்கமைய கொத்தான்தீவு, கட்டைக்காடு, பனிச்சவில் முதலான கிராமங்களில் உள்ள குளங்கள் கிராம மக்களால் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

### ஐ. ஜி. பி. உத்தரவு

(கொழும்பு)

பொலிசாருக்கு எதிரான புகார்கள் குறித்து தாமதமற்ற விசாரணை மேற்கொள்ளப்படவேண்டுமெனபொலிஸ் மா அதிபர் அனா செனிவரத்ன பணித்துள்ளார்.

### சுகாதார முக்கியத்துவம்

(கொழும்பு)

மக்களின் சுகாதாரத்துக்கு முக்கியத்துவமளிக்குமாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறியிருக்கிறார்.

### பிரத்தியேக குழு

(கொழும்பு)

உள்ளூரில் சட்டவிரோதமாக கைத்துப்பாக்கி உற்பத்தி செய்வோரைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்கு பிரத்தியேக குழு ஒன்று அமைக்கப்படவிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### கடனுதவி

(கொழும்பு)

ஜப்பான் அரசு இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு 550 கோடி யென்களை கடனாக வழங்கவிருக்கிறது.

### கோதுமை இறக்குமதி

(கொழும்பு)

இவ்வாரம் கொழும்பு வந்து சேரும் 80000 தொன் கோதுமை மாவை உடனுக்குடன் கொழும்பு சாமர்ஸ களஞ்சியம் மற்றும் பிராந்திய பண்டகசாலை ஆகியவற்றிற்கு அனுப்புவதற்கு உடனுக்குடன் உணவுத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

### பீப்பாய்களில் கசிப்பு

(கிளிநொச்சி)

லொறி ஒன்றை மறித்த முல்லைத்தீவு பொலிஸ்கோஷ்டி ஒன்று மூன்று பீப்பாய்களில் கடத்திவரப்பட்ட சட்டவிரோதக் கசிப்பை கைப்பற்யது.

### மொழிப் பரீட்சை

(கொழும்பு)

சகல பாடசாலைகளிலும் 1980ம் ஆண்டுமுதல் வருடந்தோறும் மொழிப்பரீட்சை நடத்தப்படும்.

இப் பரீட்சை சம்பந்தமாக பாடத்திட்டம் ஒன்றைத் தயாரிக்க கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது.

கிளிநொச்சியில்

## வெங்காயம், மிளகாய் விலை வீழ்ச்சி

(உருத்திரபுரம்)

கிளிநொச்சியில் தற்போது வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த சனிக்கிழமைச் சந்தையின் போது வெங்காயம் அந்தர் 100 ரூபா முதல் 125 ரூபா வரை விற்பனையாகியது.

இதனால் வெங்காயம் விளைவித்த விவசாயிகள் பெரிதும் விரக்தியடைந்துள்ளார்கள். விதைவெங்காயம் அந்தர் 300 ரூபாவுக்கு மேல் வாங்கி, செய்கைக்குப் பசளையிட்டு மருந்து தெளித்து தற்போது மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்யவேண்டியுள்ளது என்று அவ்விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

தற்போது மிளகாயின் விலையும் இருத்தல் ஒன்று 6 ரூபா முதல் 6 ரூபா 25 சதம்வரை விற்பனை செய்யப்படுகிறது. அத்துடன் உரங்களின் விலையும் பயிர்களுக்குத் தெளிக்கும் மருந்துவகைகளும் விலை ஏறிக் கொண்டிருப்பது குறித்தும் கவலைதெரிவிக்கப்பட்டது. (உ)

## உள்நாட்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலாகா தலைவர்களும் பங்குபற்றுவார்கள்.

அமைச்சர், யாழ்ப்பாணம், ஆனையிறவு, காங்கேசன்துறை வாடிவீடுகளுக்கும் நேரில் சென்று பார்வையிடுவார். சீ. நோர், திட்டத்தையும் அமைச்சர் நேரில் பார்வையிடுவார். திங்கட்கிழமை காலை அமைச்சர் கொழும்பு திரும்புவார். (க)

## புதிய அரசியல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீதான விவாதம் முடிவுற்று, நிறைவேற்றப்பட்ட பின்னரே திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா முதலான 38 பேர் மீதான குடியுரிமைத் தடை மசோதா விவாதத்திற்கு எடுக்கப்படும். (ம)

# 'பொருளாதார சுபிட்சம் விவசாயத்தில்தான் உள்ளது'

— வடமாநில வித்தியாதிபதி

(யாழ்ப்பாணம்)

''பாரதிதன் கனவு நனவாக ஒரே வழி விவசாயம்தான் என்பதை உணர்ந்து ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனைசெய்வோம்'' எனப் பாடினார். இப்பாடல்களின் மூலம் மரம் நடுவதின் முக்கியத்துவத்தை நாம் உணரலாம்'' இவ்வாறு வடமாநில வித்தியாதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெற்ற மரம்நாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

''நமது இன்றைய பொருளாதாரம், விவசாயத்தை நம்பியே இருக்கிறது. எனவே நாம் மரம் நாட்டி வளம் பெருக்க வேண்டிய கடமையுள்ளவர்களாக இருக்கின்றோம். எனவே நாம் சுபிட்ச வாழ்வு பெற மரங்களை நாட்டவேண்டும். அவற்றை நன்ருகப் பராமரிக்க வேண்டும். விவசாயத்தைச் செய்யவேண்டும்''என்ருர்.

இவ்வைபவத்தில் பேசிய பெற்ருர் ஆசிரிய சங்கச் செயலாளர் திரு. சந்திரசேகரி தமது உரையில் கூறியதாவது:

''மரம்நாட்டலென்பது எல்லோருக்கும் பயனளிக்கக் கூடிய ஒரு செயல். பண்டைக் காலங்களில் இவ்விழா ''வனமகோற்சவம்'' என வழங்கப்பட்டது. முன்பு அரசர் தமது அரண்மனை அருகில் மரங்களை நாட்டி சோலைகள் அமைத்தனர். கார்த்திகை புராணம்என்னும் நூலில் கார்த்திகை மாதத்தில் விளாத்தி, வில்வம், மா, கல் அரசு முதலானவற்றை நாட்டியவர்கள் நற்பேறடைவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்ப்புலவர்களும் இதைப் பற்றிய பாடல்கள் இயற்றி உள்ளார்கள். ஜோன்மொரிஸ் எனும் அமெரிக்கர், தாம் இளவயதில் படித்து, விளையாடிய நிழல் மரத்தை விறகுக்காக வெட்ட வந்தவர்களை தடுத்து, அவர்களுக்கு வேண்டிய விறகை வேறுவழியில்பெற்றுக் கொடுத்தார். மரம் நாட்டலின் பலன் நேரடியாக எமக்கு கிடைக்காவிட்டாலும், எம்மவராகிய அடுத்தடுத்த சந்ததியினருக்கு நிச்சயம்கிடைக்கும். இது நாட்டின் வளத்தைப் பெருக்கும் சிறந்த கருவியாகும்'' என்ருர்.

அடுத்து பேசிய கல்லூரி அதிபர் கூறியதாவது:-

''வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் சிரமம் பாராது, கல்லூரியின் வளர்ச்சியில்ஈடுபாடு கொண்டு எமது அழைப்பை ஏற்று இங்கு வந்துள்ளார். தொழில் முன்னிலைப்பாட அதிபர் திரு. இராமநாதன் கல்வியமைச்சின் சார்பில் வந்துள்ளார். திரு. பொ. சிவஞானசுந்தரம் தமது பாடசாலை என்ற உரிமையோடு இவ்விழாவில் கலந்து கொண்டுள்ளார். திரு, இராமநாதன் பெற்ருேர் என்ற சார்பிலும், தொழில் முன்னிலைப்பாட அதிபரென்ற சார்பிலும், எமதுஅழைப்பை ஏற்று வந்து கலந்து கொண்டுள்ளார். விவசாய போதனுசிரியர் திரு. ரி. எஸ். அப்புத்துரை இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துள்ளார். எம்மால் இயன்றவரை பிறருக்கு உதவும் பணியாகிய மரம் நாட்டுதலை நெடுஞ்சாலை, குளக்கரை போன்ற இடங்களில் செய்தல் வேண்டும். இவ்விழாவை கோலாகலமாகக் கொண்டாட வேண்டுமென்பது அரசின் விருப்பமாகும். இது, மகாஜனக் கல்லூரியின் வரலாற்றில் புதியதொன்றல்ல. மகாஜனுவின் சிற்பி எனப் போற்றப்படும் அமரர் திரு. தெ. து. ஜயரத்தினம், ஒய்வுபெற்ற ஆசிரியர்கள், வெள்ளி விழாக்கொண்டாடிய ஆசிரியர்கள் போன்ருேரையும், பற்பல பெரியார்களையும் கௌரவிக்குமுகமாக வருடந்தோறும் மரங்களைநாட்டியிருக்கிருர்கள் நாம்அமரராகிவிட்ட திரு. தெ. து. ஜயரத்தினத்தை நினைவு கூருமுகமாக, வருடம் தோறும் ஜயரத்தினம் நினைவு நாளன்று மரம் நாட்டி வருகிறேம். கல்லூரி வளவிலுள்ள பயன்தரும் மரங்களால் பெற்ருர் ஆசிரியர் சங்கத்திற்கு வருடாவருடம் 800ரூபாவிற்கு மேலாக வருமானம் வருகிறது. நாம் ஆடி மாதத்தில் மர நடுகை செய்திருக்கிறேம். இத்தகைய வரட்சிக்காலம் நடுகைக்கு உகந்ததல்ல எனினும், எமது விடாமுயற்சியால் நடும் மரங்களை நன்கு பராமரித்து சமூகத்துக்கும், பாடசாலைக்கும் உதவும் புனித பணியைத் தொடருவோம்'' என்று கூறினர்.

இறுதியாக கல்லூரிஆசிரியர் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை இயற்றி சனிக்கிழமைய 'ஈழநாடு' இதழில் பிரசுரிக்கப்பட்ட மரம்நாட்டலைப்பற்றிய பாடல் கல்லூரிமாணவமாணவியரால் இனிமையாக இசைக்கப்பட்டது. (கி-அ)

## 22-வது ஆண்டு மலர் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ் இலக்கியக் கழகம் எடுக்கும் 'இனமுழக்கம்' 22-வது ஆண்டுமலர் வெளியீட்டு விழா, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இம்மாதம் 27-ம் திகதி வியாழக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது.

முத்தமிழ்ச் செல்வர் அ. பொ. செல்லையா தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் யாழ். எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன் மங்கல விளக்கேற்றி வைப்பார்.

செல்வன் க. கலைச்செல்வன், செல்வி வீரகத்தி அன்பரசி ஆகியோர் தமிழ்வாழ்த்துப் படிப்பார்கள்,

திரு. மு. பொ. வீரவாகு வரவேற்புரை நிகழ்த்துவார்.

இ. தொ. மு. தலைவர் திரு. ஏ. இளஞ்செழியன் வெளியீட்டுரை நிகழ்த்துவார்,

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு, வேலணை வீரசிங்கம், எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் உரிமையாளர் திரு. சி. தியாகராஜா உட்படப் பலர் மலர் பெறுவார்கள்.

ஓவியக் கலைஞர் திரு. துரைசிங்கம் துரைரத்தினத்திற்கு சிவநெறிப் புரவலர் க. கனகராசா பொன்னுடை போர்த்திச் சிறப்பிப்பார், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி, சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம்' மட்டக்களப்பு எம். பி, திரு, செ. இராசதுரை, திருமலை எம்.பி. திரு. இரா. சம்பந்தன், சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம், திரு. வி. பொன்னம்பலம், வண்ணை ஆனந்தன் ஆகியோர் உரையாற்றுவர். (க.அ)

## உடையார்புரம் - சுதந்திரபுரம்

# வீதி ஓரங்களில் புளியங் கன்றுகள் நாட்டப்பட்டன

(உடையார்கட்டு)

அரசாங்கத்தின் ஓராண்டு நிறைவு விழாவையொட்டி ஏற்பாடுசெய்யப்பட்ட மரம் நாட்டும் திட்டத்திற்கமைய உடையார்கட்டுக் குடியேற்றத் திட்டத்தில், மரம் நாட்டும் வைபவத்தை வவனியா மாவட்டக் காணியதிகாரி திரு. எம். ஸ்ரீசண்முகராசா கடந்த 22ந் திகதி சனிக்கிழமை ஆரம்பித்துவைத்தார். முதலில், பலாக்கன்று ஒன்றை உடையார்கட்டு முருகன் ஆலயத்துக் காணியில் நாட்டி ஆரம்பித்துவைத்த பின்னர் அங்கு கூடிநின்ற மக்கள், பாந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியின் ஓரங்களில் புளியங் கன்றுகளை நாட்டினுர்கள்.

இவ்வைபவத்தில் பேசிய வவனியா மாவட்டக் காணி அதிகாரி திரு. ஸ்ரீசண்முகராசா, ''இந்தியாவில் தெருக்கள் இருமருங்கிலும், புளி, மா போன்ற பயன்தரும் மரங்கள் நாட்டப்பட்டு, அவை நாட்டின் மர வளத்தைப் பெருக்குவதோடு மட்டுமல்லாமல், பொருளாதார விருத்திக்கும், தெருக்களின் அழகுக்கும் உதவிபுரிகின்றன. அதுபோல, நாமும் உடையார்கட்டிலிருந்து சுதந்திரபுரம் சந்தி வரையான ஒரு மைல் தூரத்திற்கும் புளிய மரங்களை நாட்டுவோம்'' என்ருர்.

இதைவிட, தண்ணீர் வாய்க்கால் மருங்கிலும், கழிவு ஆறு ஓரங்களிலும் தேக்கு, வேம்பு போன்ற மரங்களை நாட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. பின்னர், குடியேற்றவாசிகளின் வீட்டுத் தோட்டங்களில் மா, பலா, மாதுளை, எலுமிச்சை போன்ற பழமரங்கள், காணி அதிகாரியால் நாட்டப்பட்டன. இவ்வைபவத்திற்கான ஏற்பாடுகளை உடையார்கட்டுக் குடியேற்ற அதிகாரி திரு. க. நமநாதன் செய்ததுடன், அதனை முன்னின்று நடத்தியும்வைத்தார். --- (அ)

## ரூபா 9150 பறிகொடுத்தார்

(கொழும்பு)

கடவத்தை பஜாருக்கு சாக்கு வாங்குவதற்கு 9150 ரூபா பணத்துடன் சென்ற பி. கந்தசாமி என்ற ஜா-எலயைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் துப்பாக்கி முனையில் மேற்படி பணம் அபகரிக்கப்பட்டது.

இவரை தந்திரமாக வேறு இடத்திற்குக் கூட்டிச் சென்ற ஒருவர் துப்பாக்கி முனையில் இப்பணத்தை அபகரித்துக் கொண்டு தலைமறைவாகி விட்டாராம். (உ)

## யாழ். சோதிடர் நவரத்தினம்

# பண்டிதராகச் சென்றவர் கலாநிதியாக மீண்டார்



(யாழ்ப்பாணம்)

பண்டிதர் கே. என். நவரத்தினம் ஐக்கிய அமெரிக்காவில் தனது நான்குமாத குருவெளி பிரசார சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் நாடுதிரும்பினுர். இவர் ஐக்கிய அமெரிக்காவின் 50 மாநிலங்களில் 38 மாநிலங்களிலுள்ள முக்கிய நகரங்களில் ''தனது வெற்றிக்குத் திறவுகோல்'' என்னும் நூலின் மகத்துவம் பற்றி வானெலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், மாநாடு முதலியவற்றில் தோன்றி பிரசாரங்கள் செய்துள்ளார்

இவரின் இந்து சோதிட திறமைபற்றி பல்வேறு தலைவர்கள் பாராட்டினுர்கள். அவர்களில் திருமதி ஜீன்டிக்சன் மிகவும் முதன்மை வாய்ந்தவர். ஏனெனில் இவர் உலகிலேயே பிரசித்திபெற்ற சோதிட ஞானி. அவ்வப்போது வெள்ளை மாளிகைக்கு அழைக்கப்படும் ஒரு சோதிடராவார்.

கடந்த 15-ம் திகதி இரவு பண்டிதர் நவரத்தினத்தின் கடைசிப் பிரசங்கம் பொஸ்டன் நகரிலுள்ள விட்ஸ் வானெலி நிலையத்தில் நடைபெற்றது. மூன்று மணித்தியாலங்கள் உரையாற்றி பிரசாரம் செய்ததை 48 மாநிலங்களிலுள்ள 42 லட்சம் மக்கள் கேட்டுப் பாராட்டினர்.

நம் நாட்டிலிருந்து சென்று 42 லட்சம் மக்களுக்கு ஒரே நேரத்தில் பிரசங்கம் செய்தவர் இவர்தான். இந்து சோதிடத்தின் முக்கியத்துவம்பற்றி பேசி பெயர்வைக்கும்முறை நட்சத்திர ரீதியாக ஆதிகாலந் தொடக்கம் வழங்கிவருவதை தத்துவ ரீதியாக எடுத்துக் காட்டி யேசுநாதரும் இதை ஒப்புக் கொண்டார் என்பதை நிரூபித்தார். இதனுல் ஹூஸ்டன் நகரில் கலாநிதிப் பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டார்.

## பிணையில்சென்ருர்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில்டிப்போவுக்கு சமீபத்தில் நடந்த பஸ் விபத்தில் பலியான வ. மாணிக்கம் என்பவரின் மரண விசாரணை முடிவில் பஸ்ஸை செலுத்திய போர்மன் கந்தையா இரத்தினகுமார் 2000 ரூபா பிணையில் சென்ருர்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

'மின்தறி ஆலை நிறுவுதல் பற்றிய கருத்தரங்கொன்று இன்று பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகின்றது. கருத்தரங்கில் வடபகுதியின் கூட்டுறவாளர்கள், புடவை உற்பத்தி அதிகாரிகள், தனியார் துறையினர் ஆகியோர் கலந்து கொள்வார்கள். கருத்தரங்கில் செக்கஸ்லவாக்கியா நாட்டுபுடவை உற்பத்தித்துறை நிபுணர் பேராசிரியர் ஊர்பன் சிறப்புரையாற்றுவார். வடபகுதி கூட்டுறவாளர்களின் ஒத்துழைப்புடன், செக்கஸ்லவாக்கிய அரசின் நன்கொடை பெற்று புடவை இரசாயன தொழிற்சாலையொன்றை வடபகுதியில் நிறுவும் சாத்தியம் பற்றி கருத்தரங்கில் ஆராயப்படும்.

° ° ° °

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டின் இறுதி ஒழுங்கு பற்றி இன்றுமாலை கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையின் இல்லத்தில் கூடி ஆராய்வர்.

° ° °

யாழ். சட்ட நிலையத்தின் மாணவர் பிரிவுபசாரவிழா இன்றுபகல் சட்டநிலையத்தில் நடைபெறுகின்றது. இவ்விழாவிற்கு கல்லூரி இயக்குணர் திரு. ஆர். விவேகானந்தன் தலைமை வகிப்பார். விழாவில் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். (கெ)

## உதைபந்தாட்டம்: யாழ். முஸ்லீம்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின், வருடாந்த லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் நேற்றைய ஆட்டத்தின் 'பி' பிரிவுப் போட்டியில் யாழ். முஸ்லீம் கழகம் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்தை 1—0 கோல்களால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. ஏ. தேவராசா மத்தியஸ்தம் வகித்தார.

ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்துக்கும் யாழ். முஸ்லிம்ஸ் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற 'ஏ' பிரிவுப் போட்டி, போதிய வெளிச்சமின்மை காரணமாக, போட்டி முடிவடைவதற்கு 12 நிமிடங்கள் இருக்கும் போதே மத்தியஸ்தரால் இடைநிறுத்தம் செய்யப்பட்டது. இக்கட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் கழகம் ஒருகோல் போட்டு முன்னணியில் நின்றது. இப்போட்டிக்கு திரு. எஸ். அன்ரனிப்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார்.

அல்சேஷன் விற்பனைக்கு
(Alsation Sale)
பெண் Pedigreed
6 மாதக் குட்டி
R. நிருந்தன்
சளிபுரம். 9886

OMAX
QUALITY WATCHES

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna - Telegram: Ealanaadu - Telephone: 38) - Registered as a News paper in Sri Lanka.